



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமீரக பள்ளிவாசல்களில்
வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜும்ஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமீரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ஷஃபான் பிறை 13 ஹிஜ்ரி 1437
Friday of Sha'ban 13th Hijri 1437
20th May 2016

| | |
|---|---|
| தலைப்பு: | **நாம் செய்யும் நற்செயல்கள் அல்லாஹ் தஆலாவிடம் எடுத்துக் காட்டப்படுகின்றன!** |

| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுல் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971 52 9919346 & Email : abusalih100@gmail.com<br>www.sunnathwaljamath.com |

*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்() மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | நாம் செய்யும் நற்செயல்கள் அல்லாஹ் தஆலாவிடம் எடுத்துக் காட்டப்படுகின்றன! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் மிக உயர்ந்தவனாகவும், பெரியவனாகவும் இருக்கிறான். அவனிடமே அனைத்து நற்செயல்களும் எடுத்துச் செல்லப்படுகின்றன. பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(4:128)

وَإِنْ تُحْسِنُوا وَتَتَّقُوا فَإِنَّ اللَّهَ كَانَ بِمَا تَعْمَلُونَ خَبِيرًا

"ஆகவே, நீங்கள் ஒவ்வொருவரும் மற்றவருக்கு உபகாரியாயிருந்து (அல்லாஹ்வுக்குப்) பயந்து (நடந்து) கொண்டால் நிச்சயமாக அல்லாஹ் உங்கள் செயலை நன்கறிந்து கொள்வான்"

**முஸ்லிம்களே**! அல்லாஹ் தஆலா நம்மை படைத்துள்ளான் மேலும் பல நற்செயல்களை செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்துகிறான். நாளை மறுமையில் அந்த நற்செயல்கள் மிக நீதமாகவும், நேர்மையாகவும் தராசில் நிறுக்கப்படும் என்றும் அறிவிக்கிறான். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (21:47)

وَنَضَعُ الْمَوَازِينَ الْقِسْطَ لِيَوْمِ الْقِيَامَةِ فَلاَ تُظْلَمُ نَفْسٌ شَيْئًا وَإِنْ كَانَ مِثْقَالَ حَبَّةٍ مِنْ خَرْدَلٍ أَتَيْنَا بِهَا وَكَفَى بِنَا حَاسِبِينَ

"மறுமை நாளில் சரியான தராசையே நாம் நாட்டுவோம். யாதொரு ஆத்மாவுக்கும் (நன்மையைக் குறைத்தோ, தீமையைக் கூட்டியோ) அநியாயம் செய்யப்படமாட்டாது.

(நன்மையோ தீமையோ) ஒரு கடுகின் அளவு இருந்தபோதிலும் (நிறுக்க) அதனையும் கொண்டு வருவோம். கணக்கெடுக்க நாமே போதும். (வேறெவரின் உதவியும் நமக்குத் தேவையில்லை)"

ஒவ்வொரு மனிதனும் நாளை மறுமையில் இறைவனின் முன்னிலையில் நிறுத்தப்படுவோம் என்கிற உணர்வில் வாழ வேண்டும். அவன் குறைவாகவோ, நிறைவாகவோ, சிறியதாகவோ, பெரியதாகவோ நற்செயல்கள் செய்திருந்தாலும் அதனை பற்றிய கணக்கு கேட்கப்படும். இதன் மூலம் ஒருவன் அந்த நாளிற்காக மிகவும் துரிதமாகவும் அக்கறையோடும் செயல்பட வேண்டும் என்று ஆர்வமூட்டப்படுகிறான்.

ஒவ்வொரு வாரமும் திங்கள்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் ஓர் அடியானுடைய நற்செயல்கள் அல்லாஹ் தஆலாவிடம் எடுத்துக் காட்டப்படுகிறது. பிறகு ஒரு வருடத்தில் செய்த அனைத்து நற்செயல்களும் ஷஃபான் மாதத்தில் இறைவனிடம் எடுத்துக் காட்டப்படுகின்றன. ஒவ்வொரு ஏற்பாட்டிலும் அறிவார்ந்த முடிவு இருக்கிறது. ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் அடியார்கள் செய்த நற்செயல்கள் பற்றி இறைவன் நன்கு அறிந்து வைத்திருந்தாலும் மலக்குமார்களிடமும் அவற்றைப் பற்றி விசாரிக்கிறான். இதனைப் பற்றி நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

يَتَعَاقَبُونَ فِيكُمْ مَلاَئِكَةٌ بِاللَّيْلِ، وَمَلاَئِكَةٌ بِالنَّهَارِ، وَيَجْتَمِعُونَ فِي صَلاَةِ الْفَجْرِ، وَصَلاَةِ الْعَصْرِ، ثُمَّ يَعْرُجُ الَّذِينَ بَاتُوا فِيكُمْ، فَيَسْأَلُهُمْ رَبُّهُمْ وَهُوَ أَعْلَمُ بِهِمْ: كَيْفَ تَرَكْتُمْ عِبَادِي؟ فَيَقُولُونَ: تَرَكْنَاهُمْ وَهُمْ يُصَلُّونَ، وَأَتَيْنَاهُمْ وَهُمْ يُصَلُّونَ

"இரவு நேரத்து மலக்குமார்களும் பகல் நேரத்து மலக்குமார்களும் தொடர்ந்து உங்களிடம் ஒருவர் பின் ஒருவராக வந்து கொண்டிருப்பார்கள். பஜ்ருத் தொழுகையிலும் அஸர் தொழுகையிலும் இரண்டு சாராரும் சந்திக்கின்றனர். பின்னர் உங்களுடன் இரவு தங்கியவர்கள் மேலேறிச் செல்கின்றனர். 'என் அடியார்களை எந்த நிலையில்விட்டு வந்தீர்கள்?' என்று அவர்களிடம் இறைவன் இது பற்றி தெரிந்து கொண்டே விசாரிப்பான். 'அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போதே அவர்களிடம் சென்றோம். அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போதே அவர்களை விட்டுவிட்டு வருகிறோம்" என்று அவர்கள் விடையளிப்பார்கள்" (متفق عليه)

அதாவது, மலக்குமார்கள் ஒவ்வொரு குழுவாக ஒருவர் பின் ஒருவராக அடுத்தடுத்து வந்து கொண்டே இருப்பார்கள். ((351/2) :الاستذكار)

அடியார்களை பார்த்துவிட்டு சென்ற மலக்குமார்களிடம் அல்லாஹ் பின்வருமாறு விசாரிப்பான். "'என் அடியார்களை எந்த நிலையில்விட்டு வந்தீர்கள்?" என்று கேட்பான். இதற்கிடையில் பரிசுத்த நாயனாகிய அவன் அனைத்தையுமே நன்கு அறிந்தவன். அல்லாஹ் தஆலா கூறுகிறான்: (3:5)

إِنَّ اللَّهَ لاَ يَخْفَى عَلَيْهِ شَيْءٌ فِي الأَرْضِ وَلاَ فِي السَّمَاءِ

"நிச்சயமாக பூமியிலோ, வானத்திலோ (உள்ள) எதுவும் அல்லாஹ்வுக்கு மறைந்ததன்று"

அடியார்களையும் அவர்களின் செயல்களையும் இறைவன் நன்கு அறிந்து வைத்திருக்கிறான். என்ற போதிலும் மலக்குமார்களிடம் விசாரிப்பதின் மூலம் அடியார்களை பெருமிதத்தோடு பாராட்ட விரும்புகிறான். இறைவன் பாராட்டி பெருமை கொள்ளும்விதத்தில் நல்லடியார்களின் செயல்களும் அமைந்துள்ளன. அதனால்தான் மலக்குமார்கள் இவ்விதம் கூறுகிறார்கள், "அந்த அடியார்கள் தொழும் நிலையிலேயே விட்டுவிட்டு வந்தோம், நாங்கள் அவர்களிடம் சென்றபோது அவர்கள் தொழுதுகொண்டே இருந்தார்கள்" என்று மலக்குமார்கள் கூற அதனை கேட்டு இறைவன் மகிழ்கிறான். அதிலும் குறிப்பாக ஸுப்ஹ் தொழுகை மற்றும் அஸர் தொழுகையை குறிப்பிட்டு காட்டுகிறான். காரணம் இந்த வேளைகளில் செய்யப்படும் நற்செயல்கள் உண்மையான மற்றும் தூய்மையான எண்ணத்தோடு செய்யப்படும் அமல் ஆகும். ஆம் இந்த நேரங்களில்தான் பொதுவாக மனிதர்கள் கவனக்குறைவாகவும், பரபரப்பாகவும் இருப்பார்கள். ((541/2) :مرقاة المفاتيح)

சங்கை நிறைந்த குர்ஆனும் இதனைப்பற்றி எச்சரித்து கூறுகிறது: (17:78)

وَقُرْآنَ الْفَجْرِ إِنَّ قُرْآنَ الْفَجْرِ كَانَ مَشْهُودًا

"ஃபஜ்ர் தொழுகையும் தொழுது வாருங்கள். ஏனென்றால், நிச்சயமாக ஃபஜ்ர் தொழுகையானது மலக்குகள் கலந்துகொள்ளும் தொழுகையாகும்"

(وَقُرْآنَ الْفَجْرِ) என்று பஜ்ர் தொழுகையை குறிப்பிட்டு கூறுகிறான். காரணம் இந்த தொழுகையில்தான் இரவில் வந்த மலக்குமார்களும், பகல் பொழுதில் வரவேண்டிய மலக்குமார்களும் ஒரே சமயத்தில் கலந்து கொள்கிறார்கள். ((520/17) : تفسير الطبري)

அனைத்து தொழுகையையும் மிகவும் பேணிக்கையோடு மிக கவனமாக நிறைவேற்ற வேண்டும் என்று அல்லாஹ் வலியுறுத்துகிறான். அதிலும் நடுத்தொழுகை எனப்படும் அஸர் தொழுகையை குறிப்பிட்டு வலியுறுத்தி கூறுகிறான்: (2:238)

حَافِظُوا عَلَى الصَّلَوَاتِ وَالصَّلَاةِ الْوُسْطَى وَقُومُوا لِلَّهِ قَانِتِينَ

"(நம்பிக்கையாளர்களே!) அனைத்து தொழுகைகளையும் (குறிப்பாக) நடுத்தொழுகையையும் (நேரம் தவறாமல்) பேணி(த் தொழுது) கொள்ளுங்கள். மேலும், (தொழுகையில்) அல்லாஹ்வுக்குப் பயந்து மிக்க உள்ளச்சத்தோடு நில்லுங்கள்"

ஸுப்ஹு மற்றும் அஸர் தொழுகையை சரிவர நிறைவேற்றி வருபவர்கள் எண்ணற்ற கூலியை பெறுவார்கள். சுவனதிற்குள் செல்லும் பாக்கியத்தையும் பெறுவார்கள். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ صَلَّى الْبَرْدَيْنِ دَخَلَ الْجَنَّةَ

"யார் *'பர்தைன்'* எனப்படும் இரு குளிர்ச்சி தொழுகையாகிய பஜ்ர் மற்றும் அஸர் தொழுகையை (பேணிக்கையோடு) தொழுதுவருகிறாரோ அவர் நாளை மறுமையில் சுவனத்திற்குள் செல்வார்" (متفق عليه)

ஐவேளை தொழுகையை ஜமாஅத்தோடு நிறைவேற்றி வருபவர் பாராட்டுக்குரியவர். அவரைப் பற்றி அல்லாஹ் மலக்குமார்களிடம் பெருமையாக பேசுகிறான்.

**அல்லாஹ்வின் அடியார்களே!** திங்கள்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளிலும் அடியார்களின் நற்செயல்கள் இறைவனிடம் எடுத்துக் காட்டப்படுகின்றன. அதனால்தான் அந்த இரு கிழமைகளிலும் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நோன்பு வைத்திருக்கிறார்கள்.

ஒரு முறை உஸாமத் இப்னு ஜைத் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! நீங்கள் நோன்பு வைத்தால் தொடர்ந்து (இடையில் விடாமல்) நோன்பு வைக்கிறீர்கள். நோன்பு வைக்காமல் இருந்தால் தொடர்ந்து நீங்கள் நோன்பு வைப்பதில்லை ஆனால் இரண்டு கிழமைகள் மட்டும் கட்டாயமாக நோன்பு வைக்கிறீர்களே?" என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பார்த்து கேட்டார்கள். அதற்கு, "அந்த இரண்டு நாட்கள் எவை?" என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்டார்கள். "திங்கள்கிழமை மற்றும் வியாழக்கிழமை" என்று இந்த சஹாபி பதிலளித்தார்கள். அதற்கு நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

ذَانِكَ يَوْمَانِ تُعْرَضُ فِيهِمَا الأَعْمَالُ عَلَى رَبِّ الْعَالَمِينَ، وَأُحِبُّ أَنْ يُعْرَضَ عَمَلِي وَأَنَا صَائِمٌ

"அவ்விரண்டு நாட்களிலும் அகில உலக இறைவனிடம் நற்செயல்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. எனது நற்செயல்கள் எடுத்துக் காட்டப்படும்போது நான் நோன்பாளியாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்" என்று விளக்கம் கொடுத்தார்கள். (النسائي: 2358)

இந்த இரண்டு சங்கையான கிழமைகளில் அல்லாஹ் தஆலா மனிதர்களுக்காக தன்னுடைய சுவன கதவுகளையும், அருட்கதவுகளையும் திறக்கிறான். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

تُفْتَحُ أَبْوَابُ الْجَنَّةِ يَوْمَ الاِثْنَيْنِ وَيَوْمَ الْخَمِيسِ. فَيُغْفَرُ لِكُلِّ عَبْدٍ مُسْلِمٍ لاَ يُشْرِكُ بِاللَّهِ شَيْئًا، إِلاَّ رَجُلٌ كَانَتْ بَيْنَهُ وَبَيْنَ أَخِيهِ شَحْنَاءُ. فَيُقَالُ: أَنْظِرُوا هَذَيْنِ حَتَّى يَصْطَلِحَا

"சொர்க்கத்தின் கதவுகள் திங்கட்கிழமையும் வியாழக்கிழமையும் திறக்கப்படுகின்றன. அப்போது அல்லாஹ்வுக்கு எதையும் இணை கற்பிக்காத ஒவ்வோர் அடியாருக்கும் மன்னிப்பு வழங்கப்படுகிறது; தமக்கும் தம் (முஸ்லிம்) சகோதரருக்கும் இடையே பகைமையுள்ள மனிதரைத் தவிர. அப்போது "இவ்விருவரும் தமக்கிடையே சமாதானம் செய்துகொள்ளும்வரை இவர்களை விட்டுவையுங்கள்; இவ்விருவரும் தமக்கிடையே சமாதானம் செய்துகொள்ளும்வரை இவர்களை விட்டுவையுங்கள்; இவ்விருவரும் சமாதானம் செய்துகொள்ளும்வரை இவர்களை விட்டுவையுங்கள்" என்று கூறப்படும்" (مسلم: 2565)

அதாவது இவ்விருவரும் தங்களுக்கிடையில் சமாதானமாய் போகும்வரை இவ்விருவரையும் விட்டு வையுங்கள்.

**தொழுகையாளிகளே**! ஒரு வருடத்தில் செய்யப்பட்ட அனைத்து நற்செயல்களும் ஷஃபான் மாதத்தில் இறைவனிடம் எடுத்துக் காட்டப்படும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

ذَلِكَ شَهْرٌ يَغْفُلُ النَّاسُ عَنْهُ بَيْنَ رَجَبٍ وَرَمَضَانَ، وَهُوَ شَهْرٌ تُرْفَعُ فِيهِ الأَعْمَالُ إِلَى رَبِّ الْعَالَمِينَ، فَأُحِبُّ أَنْ يُرْفَعَ عَمَلِي وَأَنَا صَائِمٌ

"அது ஒரு மாதமாகும். ரஜப் மற்றும் ரமளான் மாதங்களுக்கிடையில் உள்ள அந்த மாதத்தைப் பற்றி மக்களுக்கு போதிய கவனம் இருக்காது. (அடியார்கள் செய்த) செயல்கள் அனைத்தும் அந்த மாதத்தில் அகில உலகின் இறைவனிடம் எடுத்துச் செல்லப்படும். எனது நற்செயல்கள் எடுத்துச் செல்லப்படும்போது நான் நோன்பாளியாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" (أحمد: 21753 والنسائي:2357 واللفظ له)

ஷஃபான் மாதத்தில் நோன்பு வைக்க வேண்டும் என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விளக்கி கூறியதற்கு காரணம் பொதுவாக மக்கள் இந்த மாதத்தை அதிக அளவில் கண்டு கொள்வதில்லை. இவ்வாறு மக்கள் கவனக்குறைவாக இருக்கும் நேரங்களில், நாட்களில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவது மிகவும் வரவேற்பிற்குரிய, அதிக நன்மையை பெற்றுத் தரக்கூடிய செயலாகும். இத்தகைய நேரங்களில் வணக்கத்தில் ஈடுபடுவது உள்ளத்திற்கு பெரும் ஆறுதலை தரும், தூய்மையான எண்ணங்களை ஏற்படுத்தும், யாருடைய தொந்தரவும், இடையூறும் இருக்காது.

இந்த மாதம் மிகவும் ஏற்றமான மாதமாகும். நற்செயல்கள் அனைத்தும் இந்த மாதத்தில் இறைவனிடம் எடுத்துச் செல்லப்படும். ஒரு மனிதனின் நற்செயல்கள் இறைவனிடம் எடுத்துக் காட்டப்படும்போது அந்த மனிதன் நோன்பாளியாக இருந்தால் அதற்குரிய கூலி பன்மடங்காக கிடைக்கும். அவனுடைய அமல்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படும். அகில உலக இறைவனின் திருப்தியையும் பெற முடியும்.

**முஃமீன்களே**! உள்ளங்களை உயிர் பெற செய்வதற்கான முக்கியமான கால கட்டம் இந்த புனித ஷஃபான் மாதமாகும். பாக்கியம் நிறைந்த ரமளான் மாதத்திற்கு தயாராகும் மாதமாகும். ஏற்கனவே நன்மைகள் அதிகம் சேர்த்தவரின் நன்மைகளை மேலும் மேலும் அதிகப்படுத்துவதற்கான வாய்ப்பு இந்த மாதத்தில் இருக்கிறது. அதிக நன்மை செய்து தனது கணக்கில் நிரப்பமாக வைத்துக்கொள்ள முடியும். இதற்கான கூலியை இறைவனிடம் பன்மடங்காக பெற்றுக்கொள்ள முடியும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (29:58)

وَالَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ لَنُبَوِّئَنَّهُمْ مِنَ الْجَنَّةِ غُرَفًا تَجْرِي مِنْ تَحْتِهَا الأَنْهَارُ خَالِدِينَ فِيهَا نِعْمَ أَجْرُ الْعَامِلِينَ

"எவர்கள் நம்பிக்கை கொண்டு நற்செயல்களைச் செய்கின்றார்களோ அவர்களை நிச்சயமாக நாம் சுவனபதிகளிலுள்ள மேல் மாடிகளில் அமர்த்துவோம். அதில் நீரருவிகள் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கும். அதில் அவர்கள் என்றென்றும் தங்கி விடுவார்கள். நற்செயல்கள் செய்தவர்களின் கூலியும் நன்றே"

யாரேனும் நன்மைகளை சேர்க்க தவறிவிட்டால் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம். மனமுருகி இறைவனிடம் தௌபா செய்து பாவமன்னிப்பு கேட்க வேண்டும். காரணம் அல்லாஹ் தஆலா மிகவும் விசாலமான கிருபையை கொண்டுள்ளான். பெருந்தன்மையோடு மன்னித்துவிடுவதில் மிகப் பெரியவன். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (20:82)

وَإِنِّي لَغَفَّارٌ لِمَنْ تَابَ وَآمَنَ وَعَمِلَ صَالِحًا ثُمَّ اهْتَدَى

"எவர் கைசேதப்பட்டு (பாவத்திலிருந்து) விலகி, நம்பிக்கை கொண்டு, நற்செயல்களைச் செய்து நேரான வழியில் நிலைத்தும் இருக்கின்றாரோ அவருடைய குற்றங்களை நான் மிக மிக மன்னிப்பவனாகவே இருக்கின்றேன்"

குற்றங்களை முற்றிலும் குறைத்து, சுய ஆளுமையை முன்னேற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும். தவறுகள் செய்வதை நிறுத்திவிட்டு உடனடியாக நன்மையான செயல்களில் ஈடுபட வேண்டும். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (11:114)

إِنَّ الْحَسَنَاتِ يُذْهِبْنَ السَّيِّئَاتِ ذَلِكَ ذِكْرَى لِلذَّاكِرِينَ

"நிச்சயமாக நன்மைகள் பாவங்களைப் போக்கிவிடும். இறைவனைத் துதி செய்து புகழ்பவர்களுக்கு இது ஒரு நினைவூட்டுதலாகும்"

அதாவது, நன்மையான செயல்களை தொடர்ந்து செய்துவந்தால் ஏற்கனவே செய்து வந்த பாவங்களுக்கு பரிகாரமாக அமைந்துவிடும். ((355/4) : تفسير ابن كثير)

நன்மை செய்வதற்கான வாய்ப்புகளை மிகச் சரியாக பயன்படுத்திக் கொள்பவர் நிச்சயம் பாராட்டுதலுக்குரியவர். அனுதினமும் இஸ்திஃபார் செய்ய வேண்டும். அவனிடமே அபயம் தேட வேண்டும். நற்செயல் செய்யக்கூடிய வாய்ப்பு கிடைக்கும் போதும் அதனை தவற விடாமல் முந்திக் கொண்டு செய்ய வேண்டும். இவ்வாறு செய்துவந்தால் நாளை மறுமையில் சுவனத்தை பெற்று வெற்றி பெற முடியும்.

யா அல்லாஹ்! எங்களுடைய கண்ணியத்தை உயர்த்துவாயாக! எங்களுடைய உள்ளங்களை தூய்மையாக வைப்பாயாக!! எங்களுடைய பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக!!!



www.sunnathwaljamath.com

**கவனமாக கேளுங்கள்**: அல்லாஹ்விற்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள். தொடர்ந்து அவனுக்கு கீழ்படிந்து நடங்கள். சங்கையான நற்பாக்கியம் நிறைந்த ஓர் இரவு நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அதுதான் ஷஃபான் மாதத்தின் 15வது இரவாகும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

يَطَّلِعُ اللَّهُ إِلَى خَلْقِهِ فِي لَيْلَةِ النِّصْفِ مِنْ شَعْبَانَ، فَيَغْفِرُ لِجَمِيعِ خَلْقِهِ إِلاَّ لِمُشْرِكٍ أَوْ مُشَاحِنٍ

"ஷாபானுடைய 15 வது இரவிலே அல்லாஹுத்தஆலா தனது அடியார்களை நோக்கி சிறப்பான பார்வையாக பார்க்கிறான், பிறகு தன்னுடைய அடியார்கள் அனைவருடைய பாவத்தையும் மன்னிக்கிறான், ஆனால் இணைவைப்பவன் அல்லது மற்றவர்களிடம் சண்டை சர்ச்சைகளில் ஈடுபடுபவனின் பாவங்களைத் தவிர" (ابن حبان: 5665, والطبراني: 215, والبيهقي: 3552)

எனவே உள்ளங்களில் அமைதியை ஏற்படுத்த முயற்சி செய்யுங்கள். மனதை எப்போதும் தூய்மையாக வைக்க பழகுங்கள், மனிதர்களுக்கிடையில் சுமுக உறவை ஏற்படுத்துங்கள். அதுவே நற்செயல்களில் மிகச் சிறந்த நற்செயலாகும்.

قَالَ رَسُولُ اللَّهِ صلى الله عليه و سلم :أَلاَ أُخْبِرُكُمْ بِأَفْضَلَ مِنْ دَرَجَةِ الصَّلاَةِ وَالصِّيَامِ وَالصَّدَقَةِ؟. قَالُوا: بَلَى. قَالَ:إِصْلاَحُ ذَاتِ الْبَيْنِ

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், "தொழுகை, நோன்பு, தான தர்மம் செய்வதில் கிடைக்கும் கௌரவத்தை விட மிகச் சிறந்த ஒன்றை உங்களுக்கு நான் அறிவிக்கட்டுமா?" என்று கேட்டார்கள். அதற்கு அருகில் இருந்தவர்கள், "ஆம்" என்றார்கள். "மனித உள்ளங்களில் சுமுக உறவை ஏற்படுத்துவதாகும்" என்று கூறினார்கள். (أحمد: 27508)

உள்ளங்களில் அமைதியை ஏற்படுத்தி, நிம்மதியாக வாழ வைப்பதன் மூலம் பாவங்கள் மன்னிக்கப்படும் மேலும் கண்ணியமும் உயரும். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (24:22)

وَلْيَعْفُوا وَلْيَصْفَحُوا أَلاَ تُحِبُّونَ أَن يَغْفِرَ اللَّهُ لَكُمْ وَاللَّهُ غَفُورٌ رَّحِيمٌ

"(அவர்களால் உங்களுக்கு ஏதும் வருத்தம் ஏற்பட்டிருந்தால்) அதனை நீங்கள் மன்னித்துப் புறக்கணித்து விடவும். அல்லாஹ் உங்களுக்கு மன்னிப்பளிப்பதை நீங்கள் விரும்ப மாட்டீர்களா? அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் கிருபையுடையவனாகவும் இருக்கின்றான்"

தனக்கும் மற்றவர்களுக்கும் எந்த பிணக்கம் இல்லாமல் சுமுகமாக வாழக் கூடிய மனிதர் நிச்சயம் பாக்கியம் பெற்றவர். மற்றவர்கள் தவறிழைத்திருந்தாலும் அவற்றை பெருந்தன்மையோடு மன்னித்து விட வேண்டும். மற்றவர்கள் நம்மை வேண்டுமென்றே புறக்கணித்தாலும் அவர்களோடு இணக்கமாக இருக்க வேண்டும். நமக்கு அநியாயம் செய்திருந்தாலும் நாம் அவர்களுக்கு நன்மையே செய்ய வேண்டும். இதன்மூலம் எண்ணற்ற பல நன்மைகளையும், மகத்தான கூலியையும் பெற முடியும்.

(ஷஃபான் மாதம் 15 வது பிறை இரவில் நின்று வணங்கி, பகலில் நோன்பு வைக்க வேண்டும் என்று ஐக்கிய அரபு அமீரக அரசின் பத்வா குறிப்புகள் தெளிவு படுத்துகின்றன. **Fatwa No. 18682, 18683, 18315, 62067.** இதன் முழுமையான தமிழ் விளக்கத்தை **https://www.youtube.com/watch?v=7x3ZB1PImbE** காணலாம்)

ஷஃபான் மாதத்தில் நாம் செய்யக்கூடிய நற்செயல்களால் இறைவனின் திருப்தியை பெறலாம். எனவே நமது நேரங்களை வீணடிக்காமல் பயனுள்ள வகையில் பயன்படுத்தி அதிகமாக நன்மை சேர்க்க வேண்டும். நமது நற்செயல்கள் அனைத்தும் இறைவனிடம் எடுத்துக் காட்டப்படும் என்கிற உணர்விலும் உற்சாகத்திலும் நாம் வணக்கங்களில் ஈடுபட வேண்டும். இவ்வாறு நாம் நடந்து கொண்டால் நிச்சயமாக ஷஃபான் மாதத்தின் பதினைந்தாவது இரவில் மன்னிக்கப்பட்டவர்களின் பட்டியலில் அல்லாஹ் நம்மையும் சேர்த்துக் கொள்வான்.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நாம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!,

மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!

யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்த்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக, நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).